மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 206/2022 |
| பெயர் | : | அர்ச்சுனன் (PW1) |
| த/பெ. | : | அருச்சுனை முத்துகோனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27 th day of February 2026

**<u>1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது தகப்பனார் 2005 ஆம் ஆண்டில் காலமானார் என்றால் சரிதான்.இறக்கும் போது அவருக்கு 97 வயது என்றால் சரிதான்.எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு எனது தம்பியான 1 ஆம் பிரதிவாதியின் வீட்டில் இருந்தார் என்றால் சரிதான்.2001 ஆம் வருடம் எனது தகப்பனாருக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால் 1 ஆம் பிரதிவாதியின் வீட்டில் இருந்து எனது வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன் என்றால் சரிதான்.எனது வீட்டிற்கு வந்தபிறகு எனது தகப்பனார் உடல் நலம் சரியில்லாமல் தான் இருந்தார் என்றால் சரிதான்.

2)எனது சகோதரி முருகம்மாளும் எனது அக்கா சுப்பம்மாளும் தூத்துக்குடி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான்.அந்த வழக்கின் எண் 352/2012 என்றால் சரிதான்.எனது உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 8 பேர்.அந்த 8 பேர் யார் யார் என்றால் நாராயணன், சுப்பம்மாள், பரமசிவன், நான், முருகம்மாள், சின்னசாமி, ஜெயலட்சுமி, சோமு .தூத்துக்குடியில் உள்ள வழக்கில் எனது தகப்பனார் அவரது காலத்திலேயே சொத்துக்களை பிரித்துக்கொடுத்துவிட்டார் என்று கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3)எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் போது எனக்கு பிரித்துக் கொடுத்த சொத்தை பொறுத்து 19.04.1974 ல் செண்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த செண்டில்மெண்ட் சொத்தின் சர்வே எண் 38/1 என்றால் சரிதான்.அதன் விஸ்திரனம் 2 ஏக்கர் 70 செண்ட்டில் மேல்புறம் 1 ஏக்கர் 46 செண்ட் என்றால் சரிதான்.

4)எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த சொத்தினை 11.12.1980 எனது அண்ணன் மனைவி நாச்சியாருக்கு எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல அது வேறுசொத்து.எனக்கு கொடுத்த சொத்தை நான் விற்றுவிட்டேன் என்றாலும் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.எனது தகப்பனார் எந்த தேதியில் உயில் எழுதினார் என்றால் 2002 ஆம் வருடம்.எனது தகப்பனார் தாவா சொத்தை பொறுத்து எந்தவித உயில் சாசனமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5)உயில் எழுதும்போது தகப்பனாரை நான் தான் காரில் கூட்டிச்சென்றேன் என்றால் சரிதான்.எனது தகப்பனார் உயில் பிறப்பித்துக்கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் நல்ல மனநிலையிலும் உடல்நிலையிலும் திட காத்திரமாக இல்லை என்றால் சரியல்ல.உயில் எழுதுவதற்கு பத்திரம் எழுதுபவர்களிடம் நான் தான் விவரம் சொன்னேன் என்றால் சரிதான்.உயில் ஆவணத்தில் சின்னசாமிக்கும் பரமசிவனுக்கும் ஏற்கனவே செண்ட்டில்மெண்ட் கொடுத்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை.அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

6)உயில் சாசனத்தில் கண்டபடி சின்னசாமிக்கோ, பரமசிவனுக்கோ சொத்துக்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.உயில் சாசனத்தில் யாரெல்லாம் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் சின்னகண்ணுபுரத்தை சேர்ந்த ஒருவரும், மகிழ்ச்சிபுரத்தை சேர்ந்த ஒருவரும் கையொப்பம் செய்தார்கள்.மேற்படி சாட்சிகளையும் நான் தான் அழைத்து சென்றேன் என்றால் சரிதான்.வாசா ஆவணம் 3 ஆனது உயில் சாசனம் என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.மேற்படி உயில் சாசனம் என் தகப்பனார் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

7)எனது அப்பா கீழே விழும் வரை நன்றாக கையெழுத்து செய்வார் என்றால் சரிதான்.எனது தகப்பனார் சுயநினைவு இல்லாத நிலையில் அவருடைய கைரேகையை மோசடியாக பிரட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.சின்னசாமிக்கும் எனது தகப்பனார் புஞ்சை நிலம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார்.மேற்படி நிலத்தின் சர்வே எண் 496/2 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.அது வேறு சர்வே எண் ஆவணத்தை பார்த்து விசாரித்தால் தான் சொல்லமுடியும்.மேல தட்டபாறையில் எந்த இடத்தில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

8)1 வது பிரதிவாதி சின்னசாமி தாவா சொத்தை தான் என் தகப்பனார் கொடுத்ததாக கட்சி செய்கிறார் என்றால் சரியல்ல.தாவாசொத்து எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு சின்னசாமி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் இல்லை.எனது அப்பா காலமான பிறகு பட்டா எண் 2149 ஏற்பட்டு சின்னசாமி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.சின்னசாமி அனுபவித்து வந்த சொத்தை தான் அவரது மனைவியான 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

9)நான் சின்னசாமி அனுபவித்து வந்த சொத்தை மோசடியாக உயில் தயார் செய்து எனது பெயரில் பட்டா மாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்திருக்கும் பட்டா மற்றும் தீர்வை ரசீதுகள் வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.தாவா சொத்தை பொறுத்து எனதுதகப்பனார் எந்த காலத்திலும் உயில் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

10)தாவா சொத்து எந்த காலத்திலும் என்னுடைய அனுபவத்தில் கிடையாது என்றால் சரியல்ல.உயிலில் எத்தனை அயிட்ட சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஒரு அயிட்ட சொத்து தான் காண்பிக்கப்பட்டுள்ளது.எனது ஊரில் எனது தகப்பனார் வீடு கட்ட மனை கொடுத்திருந்தார் என்றால் இல்லை.ஊரில் உள்ள வீடு பிரிவினை ஆகாமல் உள்ளது.எந்த சொத்துக்களையும் சரிவர பிரிக்கவில்லை என்றால் சரியல்ல.உயில் தயார் செய்வதற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் நினைவில் இல்லை.

11)தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதோ எனது அனுபவத்திலோ இல்லை என்றால் சரியல்ல.1 ஆம் பிரதிவாதி மற்றும் 2 ஆம் பிரதிவாதி நீண்டகாலமாக சென்னை திருப்போரூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.1 ஆம் பிரதிவாதி மற்றும் 2 ஆம் பிரதிவாதி சென்னையில் வசித்து வருவதால் சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.1 ஆம் பிரதிவாதி 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் நல்ல எண்ணத்தில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12)ஆவணங்களை பரீசிலினை செய்து தான் 4 ஆம் பிரதிவாதி 29.03.2010 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல.மேற்படி கிரைய ஆவணம் ரத்து செய்ய முடியாது என்றால்

சரியல்ல.உயில் விவரம் எனது சகோதரர்களுக்கோ , சகோதரிக்களுக்கோ தெரியாது என்றால் சரியல்ல.மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட உயில் என்பதால் தான் எனது தகப்பனாருக்கோ, எனது சகோதரர்களுக்கோ, எனது சகோதரிக்களுக்கோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.மேற்படி உயில் ஆவணம் எனது தகப்பனார் எழுதிக் கொடுக்ககாததால் சட்டபடி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.நான் மோசடியாக உற்பத்தி செய்த உயில் மூலம் தாவா சொத்தை பொறுத்து பரிகாரம் கோரியுள்ளதால் தாவா வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>5 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)10.05.2002 ஆம் தேதி எனது தகப்பனார் எந்த உயிலும் தாவா சொத்தை பொறுத்து எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல.தாவா சொத்தை நான் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.தாவா சொத்தை பொறுத்து பட்டா எண் மற்றும் விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும் 7297.மேற்படி பட்டாவானது வழக்கு தாவாவிற்கு பின்னிட்டு என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2)தபசில் சொத்தில் கிணறு தோண்ட 22.02.1974 ஆம் தேதி கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி 13.05.2006 ஆல் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.யார் யார் எவ்வளவு தொகைக்கு கடன் வாங்கியிருந்தார்கள் எந்த சொத்துக்களை பொறுத்து கடன் வாங்கியிருந்தார்கள் எவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது , யார் ஜாமீன்தாரர்களாக இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3)அருச்சுனை முத்துகோனார் எனக்கு உயில் எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல.அருச்சுனை முத்து கோனார் தானாக முன்வந்து உயில் எழுதிவைக்கவில்லை என்றாலும் பின்னிட்டு என்னுடைய ஆலோசனை பெயரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.தாவா சொத்தை பொறுத்து 5 ஆம் பிரதிவாதிக்கு ஆறில் ஒரு பங்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்தவிதமான பாத்தியமும் கிடையாது என்றாலும் எனக்கு எந்த அனுபவமும் கிடையாது என்றாலும் சரியல்ல.இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–திருமதி.ப.சுமதி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.